DECEMBER 2024 **P/ID 35321/PTL3L**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்கட்கு, முறையே
50 சொற்களில் விடையெழுதுக.

1. அகத்திணை ஏழு யாவை?

2. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்னும் நூலைப் பற்றி நீர் அறிவன யாவை?

3. பாடாண் திணை எதற்குப் புறம்?

4. அகநானூற்றில் முல்லைப் பாக்கள் எத்தனை?

5. களிற்றியானை நிரை - பொருள் சுட்டுக.

6. கைகோள் யாவை?

7. கண்ணி - பொருள் கூறுக.

8. கொற்றவள்ளைத் துறையின் பொருண்மை யாது?

9. பசத்தல் என்றால் என்ன?

10. வல்சி - பொருள் சுட்டுக.

11. திரைத் திவலை - பொருள் கூறுக.

12. சிறியவன் செல்வம் என்று நற்றிணை குறிப்பது எதை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்கட்கு, முறையே
250 சொற்களில் விடையெழுதுக.

13. தலைவி வருந்திக் கூறியது என்ன? பெருங்குன்றூர் கிழார் வழி விளக்குக.

14. களவொழுக்கத்தின்கண் நிகழும் அலரினை அம்மூவனார் எங்ஙனம் விளக்குகிறார்?

15. பாண்டியனை நெட்டிமையார் புகழுமாற்றை எடுத்துரைக்க.

16. கரிகாலனின் பேராற்றலை கருங்குழலாதனார் போற்றுமாறு யாங்ஙனம்?

17. நின்ற சொல்லர்; நீடுதோறு இனியர் .... எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலின் பொருளைத் தருக.

18. நோம் என் நெஞ்சே .... என்ற குறுந்தொகைப் பாடலை எழுதி விளக்குக.

19. கலித்தொகையின் தொகுப்பு முறையை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்கட்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. அகநானூறின் பாலைத் திணைப் பாடல்களின் கருத்துக்களை விளக்குக.

21. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் சிறப்புகளாகக் காரிக்கிழார் கூறுவனவற்றை விவரி.

22. குறிஞ்சி மற்றும் நெய்தல் திணைப் பாடல் செய்திகளை நற்றிணை வழி விளக்குக.

23. குறுந்தொகையின் குறிஞ்சி, மருதம், பாலைப் பாடற்களின் செய்திகளைத் தருக.

24. வறியவன் இளமை போலி.... எனத் தொடங்கும் கலித்தொகைப் பாடல் உணர்த்துவனவற்றை விளக்குக.

———————